2023 டிசம்பர் மாதம் 19– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 174 / 2019*

*2023 –ம் ஆண்டு டிசம்பர் மாதம் 19– ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 3, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. T.R. லட்சுமிதேவி,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 3, அப்துல்வகாப் |
| தகப்பனார் பெயர் | : | ராஜாமுகமது |
| ஊர் | : | மதுரை |
| வட்டம் | : | மதுரை |
| மாவட்டம் | : | மதுரை |
| தொழில் | : | ஆவணக்காப்பாளர் |
| வயது | : | 32 |

தேதி: 19.11.2023.

**முதல் விசாரணை :–**

நான் மதுரை மீனாட்சி மிஷின் மருத்துவமனையில் ஆவணக்காப்பாளராக பணிபுரிகின்றேன். அழைப்பாணையின் பேரில் ஆவணங்களுடன் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சாட்சியம் அளிக்க எனக்கு வழங்கப்பட்ட அங்கீகாரக்கடிதம் **ம.சா.ஆ.12,** சாலை விபத்தில் காயம்பட்ட மலர் என்ற ஜெயராஜ் என்பவர் எங்களது மருத்துவமனையில் 15.06.2016 முதல் 08.07.2016 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுள்ளார். அதற்குண்டான சிகிச்சைக்கோப்பு சான்றிட்ட நகலை விடுவிப்பு சான்று உட்பட இணைத்து தாக்கல் செய்கின்றேன். அது **ம.சா.ஆ.13,** அவர் வெளிநோயாளியாக 13.02.2021 வரை தொடர் சிகிச்சை பெற்றுள்ளார் அதன் குறிப்புகள் **ம.சா.ஆ.14,** சிகிச்சை அளித்த மருத்துவர் வழங்கிய காயச்சான்று நகல் **ம.சா.ஆ.15,** எங்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக மொத்தம் ரூ.4,17,867/– செலவு செய்துள்ளார். அதற்குண்டான ரசீதுகளின் தொகுப்பு **ம.சா.ஆ.16,** என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.11 ஆவணத்தில் கண்டுள்ள

ரசீதுகளுக்குண்டான தொகைகள் அனைத்தும் (**ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகின்றது**) நான் தற்பொழுது தாக்கல் செய்துள்ள தொகையில் அடங்கியுள்ளது. மேற்படி தொகையை நோயாளி ரொக்கமாக செலுத்தியுள்ளார்.

**குறுக்கு விசாரணை:- (2-ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

ம.சா.ஆ.16 ஆவணத்தில் உள்ள ரசீதுகளின் அசல் நோயாளி எங்கள் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கும் போது அவரிடம் கொடுத்து விட்டோம். இந்த தொகை சம்மந்தமாக காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் எங்கள் மருத்துவமனையில் எந்த தொகையும் பெறப்படவில்லை. அசல் ரசீதுகளை வைத்து தனிநபர் மருத்துவக்காப்பீட்டின் மூலம் வாங்கியிருக்க வாய்ப்புள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ.16 ஆவணத்தில் முதல் பக்கத்தில் உள்ள ரசீதில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கான தனி தனி ரசீதுகள் தான் அந்த ஆவணத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ம.சா.ஆ.16 ஆவணத்தில் தொகையை மிகைப்படுத்தி சான்றிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. அந்த ரசீதில் நாங்கள் தொகையை பெற்றுக்கொண்டோம் என்பதற்கு கையொப்பம் எதுவும் இல்லையென்றால் அது கணிணிப்பதிவிறக்க நகல் என்பதால் கையொப்பம் தேவையில்லை. ம.சா.ஆ.11 ல் இணைக்கப்பட்டுள்ள ரசீதுகளில் ரூ.2,04,275/- தொகையை மட்டும் தான் எங்கள் மருத்துவமனைக்கு செலுத்தி வைக்கப்பட்டது என்றும், மற்ற ரசீதுகள் மனுதாரருக்கு உதவுவதற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.16 ஆவணம் மனுதாரருக்கு உரியது அல்ல என்றும், வேறு நபருக்குறியது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:- இல்லை.**

**ஒப்பம்/-எம்.மூர்த்தி,**
**தலைமைக்குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்**